**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.118/2025 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.9 |
| பெயர் | அருள்மதிகண்ணன் | கிராமம் | |
| தந்தை பெயர் | | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 09.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1–Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் துணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.02.2023 தேதியில் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி சட்டம்சார்ந்த மருத்துவ துறையில் பணியில் இருந்தபோது புதுக்கோட்டை நகர காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் இருந்து மதியம் 2.48 மணிக்கு புதுக்கோட்டை நகர காவல் நிலைய குற்ற எண். 69/2023 இதச பிரிவுகள் 288, 338, @ 288 304 ஏ ன் படியான வழக்கின் தொடர்புடைய கோவிந்தம்மாள் வயது 45, என்ற பெண் சடலத்திற்கு பிரேத பரிசோதனை செய்யும் வேண்டுகோள் கடிதத்தை திருமதி.S.கீர்த்திகா என்பவர் மூலமாக பெற்று எனது துறையில் பிரேத பரிசோதனை எண். 205/2023 இடப்பட்டு மேற்குறிய காவலர் சடலத்தின் அடையாளத்தை உறுதி செய்து மாலை 3.55 மணிக்கு பிரேத பரிசோதனையை துவங்கினேன். அப்போது சடலம் முழுவதும் மரணத்திற்கு பிந்தைய விறைப்பு தன்மையுடம் காணப்பட்டது. சமச்சீரான மத்திமமான கருத்த தோல் நிறம் கொண்ட பெண் பிரேதத்தின் கண்கள் மூடிய நிலையில் இருந்தது. அனைத்து கை மற்றும் கால் விரல் நகங்கள் இள நீல

நிறத்தில் இருந்தன.

சடலத்தில் கீழ்க்கண்ட மரணத்திற்கு முந்தைய காயங்கள் காணப்பட்டன.

1. கழுத்துப்பகுதியில் கீழ்புறத்தில் சிகிச்சைக்காக துளையிடப்பட்ட காயம் இருந்தது.

2. இரு புறங்கைகளிலும் ஊசி மருந்து செலுத்துவதற்கான துளையிடப்பட்ட மருத்துவகாயம் இருந்தது.

3. வலது காலில் முன் பகுதியில் கரும்பழுப்பு நிற தோல் ஆழம் உடைய கன்றிய காயமானது சிறிது சிராய்ப்புடன் 2.5 X 1 செ.மீ அளவில் இருந்தது.

4. தலையில் வலது புறத்தில் C வடிவ தையலிடப்பட்ட அறுவை சிகிச்சை காயமானது 25 செ.மீ நீளத்திற்கு 13 தையல்களுடன் இருந்தது. தலையை கீறி திறந்ததில் மண்டையோட்டு தோல் முழுவதும் பரவலான கன்றிய காயம் இருந்தது. வலதுபுற மண்டையோட்டு பகுதி மற்றும் மேல் புறத்தில் 18கிராம் அளவிற்கு உறைந்த ரத்தம் இருந்தது. மூளையானது சற்று மிருதுவாக காணப்பட்டது. பெருமூளையில் இருபுற கோளங்கள் மேல் மற்றும் பின்பகுதியில் Sub-dural Haemorrhage இருந்தது. சிறுமூளையின் இடது கோளத்திலும் அவ்வாறே இருந்தது. பிளப்பாய்வில் மூளை திசு பகுதி வீக்கத்துடன் நீர் கோர்த்து காணப்பட்டது.

5. உள் உறுப்புகளை ஆராய்ந்ததில் வயிற்றுப்பகுதியில் இயல்பாக இருந்தது, மார்பு பகுதியில் எலும்புகள் சாதாரணமாக இருந்தன. இருதயம் சாதாரண அளவுடன் பிளப்பாய்வில் உள் அறைகளில் திரவ ரத்தத்துடன் இருந்தது. இரு நுரையீரல்கள் சாதாரண அளவில் கீழ் பகுதியில் ரத்த தேக்கத்துடன் காணப்பட்டன. கழுத்துப்பகுதியில் நாவடி எலும்பு பிற திசுக்கள் இயல்பாக இருந்தன. இரைப்பையினுள் 125 மி.லி வெள்ளைநிற தடித்த திரவத்துடன் சிறிது படிமங்களுடன் எவ்வித அசாதாரண வாசனையின்றி இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாக காணப்பட்டன.

6. சிறுகுடல், சிறுநீர்பை காலியாக இருந்தன. இடுப்பு எலும்பு பகுதி பிறப்புறுப்பு மண்டலம் மற்றும் தண்டுவட மண்டலம் இயல்பாக இருந்தன. கருப்பை சாதாரண

அளவிலும் உள்அறை காலியாகவும் இருந்தது. சடலத்தில் வேறு எந்த வெளி மற்றும் உள் காயங்கள் காணப்படவில்லை.

7. பிரேத பரிசோதனையை மாலை 4.50க்கு முடித்து மேற்படி நபர் அவருடைய தலையில் ஏற்பட்ட காயங்களின் காரணமாக இறந்திருக்க கூடும் என்று கருத்துரை வழங்கினேன்.மேற்படி நபருக்கு நான் பிரேத பரிசோதனை மேற்கொண்டு வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> - இல்லை.

Sd/– அருள்மதிகண்ணன்

வீடியோ கான்பரன்சிங் மூலம் சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.